Cr. Mis.39(Eng) 663697 – 11 – 2- 70

**DEPOSITION OF WITNESS**

(CHAPTER XXV CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
III ADDL. DIST. COURT, TIRUVALLUR AT POONAMALLEE.

SESSIONS CASE NO.16/2025

Deposition of PW7

| | | | |
|---|---|---|---|
| Name | : முகுந்தன் | Village | : |
| Father's / Husband's Name | : பெருமாள் | Calling | : |
| Age | : | Taluk | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on the 26th day of February 2026.

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் தற்போது டி4-புதூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகின்றேன். வழக்கு சம்பவ காலத்தில் நான் டி10 திருமுல்லைவாயல் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 28.05.2024 அன்று காலை பணிக்கு ஆஜராகி பணியிலிருக்கும்பொழுது ஆய்வாளர் அவர்கள் பிரேத பரிசோதனைக்காக கே.எம்.சி.மருத்துவமனை சவக்கிடங்கில் உள்ள பிரேதத்திற்கு பிரேத பரிசோதனை செய்ய ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோளை பெற்று அதனை மருத்துவமனையில் கொடுத்து பிரேத பரிசோதனைக்கு பின்பாக அந்த பிரேதத்தை இறந்தவரின் மகனிடம் கொடுத்தேன். இறந்தவர் அணிந்திருந்த ஆரஞ்சுகலர் அரை கை சட்டை, சாம்பல் நிற பேண்ட் ஆகியவற்றை நிலையம் கொண்டு வந்து ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். அதனை ஆய்வாளர் படிவம் 95 ல் பெற்றுக்கொண்டார். அந்த ஆரஞ்சுகலர் அரை கை சட்டை **சா.பொ.2.** சாம்பல் நிற பேண்ட் **சா.பொ.3.** அதன்பிறகு உடல் உள்ளுறுப்புகை மருத்துமனையில் இருந்து பெற்று அதனை தடய அறிவியல் கூடத்தில் ஒப்படைத்து ஆய்வாளரிடம் ஒப்புகை சீட்டை வழங்கினேன். ஆய்வாளர் என்னை விசாரித்துக்கொண்டார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தடய அறிவியல் கூடத்தில் ஒப்படைத்ததற்கான ஒப்புகையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் ஆய்வாளரிடம் தாக்கல் செய்தேன். திருமுல்லைவாயல் காவல் நிலைய ஆய்வாளர் விசாரணைக்காக முன்னிலையாக எனக்கு சம்மன் கொடுக்கவில்லை. ஒரே காவல்நிலையத்தில் பணிபுரிவதால் நான் பணியிலிருக்கும்போதே விசாரித்துக்கொண்டார்.

**மறுவிசாரணை இல்லை.**